மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் பதிவுத் துறை தொடர்பாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் பதிவுத் துறையின் மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு அமைச்சர் திருமிகு BV ரமணா, (வணிக வரி மற்றும் பதிவுத்துறை) அவர்கள், தலைமைச் செயலகத்தில் இன்று (20.5.2013) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசுச் செயலாளர் திருமிகு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., மற்றும் பதிவுத்துறைத் தலைவர் திருமிகு தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் விரிவாக ஆய்வு நடத்தினார்கள். இக்கூட்டத்தில், கூடுதல் பதிவுத்துறைத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நடப்பு நிதியாண்டில் (2013–2014) ஏப்ரல் 2013–ல் ரூ.722.06 கோடி வருவாய் ஈட்டி உள்ளது. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் சுமார் 60.50 சதவீதம் அதிகமாகும். 2013 ஏப்ரல் மாதத்தில் 2,27,467 ஆவணங்கள் பதிவாகியுள்ளன. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 15 சதவீதம் அதிகமாகும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், சார்பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்கள் நிரந்தரமான பதிவுறுக்கள் என்பதால், அவற்றை தீ விபத்திலிருந்து பாதுகாப்பது அவசியம் என்றும், அனைத்து அலுவலகங்களுக்கும் தீ விபத்து தடுப்பு உபகரணங்களான தீ தடுப்பாண்கள், தீ தடுப்பு வாளிகள், மின் இணைப்பு முறிப்பான்கள், அலுமனிய ஏணிகள் ஆகியவை வழங்கப்படும் என்றும், இவற்றை பயன்படுத்த பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படும் என்றும், இதற்காக ரூ.4.78 கோடி ஒதுக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். மேலும், பதிவுத்துறையின் பதிவுறுக்கள் அடிக்கடி கையாளப்படுவதால் காகிதத்தினால் ஆன இந்தப் பதிவுறுக்கள் சிதிலமடைந்தும், எளிதில் கிழிந்து விடக்கூடியதாகவும் ஆகிவிடுகின்றன. இவற்றை எவ்வித சேதமும் அடையாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை நுண்ணிய படம் பிடிக்கவும், அவற்றை மிண்ணனு மயமாக்கவும், ரூ.140 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்தார்கள்.

பொதுமக்களிடமிருந்து வில்லங்கச் சான்றுகள் கோரி வரப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், சார்பதிவாளர் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைப் பளுவை குறைக்கும் நோக்கிலும், பொது மக்கள் தாங்களே இணையதளம் மூலமாக சொத்து தொடர்பான வில்லங்கங்களைப் பார்க்கவும், அதனை நகல் எடுத்துக் கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இதன்மூலம் பொது மக்கள் தாங்கள் அறிய விரும்பும் சொத்து தொடர்பான வில்லங்கங்களை உடனுக்குடன் எந்த நேரமும் தெரிந்து கொள்ள முடிவதுடன் தங்களது சொத்தில் முறைகேடான ஆவணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் அறிய இயலும். இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு முழுவதும் 50 பதிவு மாவட்டங்கள் இருப்பினும், திருவள்ளூர், தேனி, பெரம்பலூர், திருவாரூர் ஆகிய வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப்பதிவாளர் அலுவலகங்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. இந்தக் குறையை களையும் வகையில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவகம் அமைக்கப்படும் என்றும், மேலும், பதிவு மாவட்டங்களின் ஆட்சி எல்லைகள் வருவாய் மாவட்டத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். இந்த மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில், நிர்வாகப் பணிகளைக் கவனிக்கும் மாவட்டப்பதிவாளர் பதவி, உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு உயர்த்தப்படும். தற்போதுள்ள 45

தணிக்கை மாவட்டப் பதிவாளர் பணியிடங்கள் 85 ஆக உயர்த்தப்படும். சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணிகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர் நியமிக்கப்படுவார். இதனால் நிர்வாகம் சீராவதுடன், தணிக்கைப் பணி மற்றும் சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணி செம்மைப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்கள்.

பொதுமக்கள் கால விரயம் இன்றி ஆவணப் பதிவினை மேற்கொள்ளும் பொருட்டு, பொது மக்கள் இணைய தளம் மூலம் சார்பதிவாளருடன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆவணப் பதிவு செய்து கொள்ள முன்பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்கள். ஆவணம் பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட நேரத்தை பொதுமக்கள் இணையதளம் மூலம் முன்பதிவு செய்துகொண்டு, அந்த நேரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் சென்று, தங்களது ஆவணப் பதிவு தொடர்பான பணிகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்ளலாம். இத்திட்டம் மிக விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் பதிவுத்துறை அலுவலகங்களில் பதிவுத் துறை ஆவணங்களைப் பராமரிப்பதற்கும், பணியாளர்கள் முழு அளவில் பணியாற்றுவதற்கும் போதிய இட வசதி இல்லாததைக் கருத்தில் கொண்டும், சிறிய இடங்களுக்கு அதிக அளவு வாடகை தர வேண்டிய நிலை உள்ளதை கருத்தில் கொண்டும், பதிவுத் துறையில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், 2011–2012 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டவும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 48 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 இடங்களில் 29 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியே 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல், உதகமண்டலம், கோயம்பேடு மற்றும் செய்யார் ஆகிய நான்கு இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்களும், 35 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித்தனியாக புதிய கட்டடங்களும் கட்டப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தக் கட்டடங்கள் சூரிய சக்கியின் மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் விதமாகக் கட்டப்படும்.

பதிவுத்துறையில் தற்போது சுமார் 1700க்கும் மேற்பட்ட பணியிடங்கள் பல்வேறு நிலைகளில் தற்காலிகப் பணியிடங்களாக உள்ளன. வணிகவரித்துறையிலுள்ளது போன்றே பதிவுத் துறையிலும் இந்தப் பணியிடங்கள் நிரந்தரமாக்கப்படாமல் தொடர்ந்து பணி நீட்டிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, இதனால் ஏற்படும் நிர்வாக சிக்கல்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஏற்படும் சிரமம் ஆகியவற்றைக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, பதிவுத்துறையில் உள்ள தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றின் பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க, கடந்த ஆண்டு 150 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்க ஆணையிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, நடப்பாண்டிலும் சென்னையைத் தவிர பிற இடங்களில் அதிக ஆவணப்பதிவு நடைபெறும் 150 சார்பதிவாளர்

அலுவலகங்களுக்கு ஜெனரேட்டர்கள் வழங்கப்படும் என்றும் இது குறித்து அரசாணை விரைவில் வெளியிடப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

பதிவுத்துறையின் பணியாளர்களுக்கு துறையார் நிர்வகிக்கப்படும் சட்டங்கள் குறித்து பயிற்சி வழங்குவதற்காக சென்னையில் பதிவுத்துறைப் பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. 2012–2013–ஆம் ஆண்டில் இந்த பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் பணியாளர்களுக்காக ரூ.49 இலட்சம் செலவில் தங்கும் விடுதி கட்ட ஆணையிடப்பட்டு அதற்கான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. 2013–2014–ஆம் ஆண்டில் இந்த பயிற்சி மையத்திற்கு தேவையான கணினி மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் வாங்க ரூ.9.70 இலட்சம் பகுதி II திட்டத்தின்படி ஒதுக்கப்பட உள்ளது. இப்பயிற்சி மையத்தில வழங்கப்படும் பயிற்சியை மேலும் செம்மைப்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, பயிற்சிக்காக ஒதுக்கப்படும் நிதியுடன், கூடுதலாக ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

வலைதள அடிப்படையிலான மென்பொருள் தயாரித்தல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 07.05.2013 தேதியில் திறக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மோசடியாக ஆவணப்பதிவுகள் நடைபெறுவதை தடுக்கும் பொருட்டு, ஏற்கனவே அரசால் பல ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் சட்டம் மற்றும் விதிகளை மாற்றியமைக்க தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். பதிவு அலுவலகங்களில், சோதனை தணிக்கை பதிவுத்துறைத் தலைவர், அரசுச் செயலாளர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் ஆகியவர்களால் 3 மாதத்திற்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள்.

பதிவுத்துறை அனைத்து அலுவலர்களும் அரசுக்கு வருவாய் ஈட்டுவதில் சிறப்பான முன்னேற்றம் காணவேண்டும் என்றும், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்கள் திருமிகு K.மதலைமுத்து, K.V.சீனிவாசன், சென்னகேசவ லு, திருமதி ரத்னா, அரசு துணைச் செயலாளர் C.ஜெயராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.**